தமிழகம்

ப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] குன்றக்குடி 11—2—63 வார இதழ் விலை – 10 காசுகள். [இதழ் 12

91/1

இந்திய நாடு

இந்திய நாடு எம்நாடு
இதுவே எமக்குத் தாய்நாடு
முந்திப் பிறந்த கலையெல்லாம்
முயன்று பெற்ற பெருநாடு

அன்பிற் சிறந்தது எம்நாடு
அருளிற் சிறந்தது எம்நாடு
பண்பிற் சிறந்தது எம்நாடு
பாரில் சிறந்தது எம்நாடு

மலைமுடி தரித்தது எம்நாடு
மாகடல் உடுத்தது எம்நாடு
அழகு மலைகள் அருநதிகள்
அணிந்து சிறந்தது எம்நாடு

அறிவு வழியென் றேமாந்தே
அழிவுக் குழிக்கே வந்துற்ற
அவனிக் கெல்லாம் அன்பாலே
அருள்நெறி தருவதும் எம்நாடே

—ரா. பொன்ராசன்

வாழ்விக்க வந்தோர் வரலாறு

9 கண்ணப்பர்

(முன் தொடர்ச்சி)

திண்ணனும் நாணனும் சிறிது தூரம் நடந்தனர்.

"நாண! அதோ நம்முன் தோன்றுகிற குன்றினுக்குச் செல்லலாமே" என்றான் திண்ணன்.

"நாமங்கு சென்றால் நல்லதோர் காட்சி காண்போம்; அங்கு குடுமித்தேவர் எழுந்தருளியிருக்கிறார். நாம் கும்பிடலாம்" என்றான் நாணன்.

"நாண! நாம் மலையை நெருங்க நெருங்க என்மீதுள்ள சுமை குறைவது போல் தெரிகிறது. எனது உள்ளத்தில் ஏதோ ஒருவகையான புதிய 'ஆசை'யும் பொங்கி எழுகிறது; தேவர் இருக்கும் இடத்தைச் சீக்கிரம் சொல்க" என்றான் திண்ணன். விரைந்து நடந்தனர். பொன்முகலி ஆற்றைக்கடந்து, அதன் கரையிலே உள்ள ஒரு மரநிழலில் பன்றிவைக்கப் பெற்றது. காடனை நோக்கி,

ஈங்குநீ நெருப்புக் காண்பாய்
இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள்வந் தணைவோம்

என்று கூறி நாணனும் திண்ணனும் மலைநோக்கி நடந்தனர். "முன்பு செய் தவத்"தால் திண்ணனின் உருமாறியது. அன்னவரிடத்து அன்பு பொங்கி எழுகிறது. எல்லையற்ற ஆர்வம் பொங்குகிறது 'மன்பெரும் காதல்' மேலெழுகிறது என்புநெக்குருகுகிறது. இவ்வாறு வேட்கை மீதூரத் திண்ணன் மலையேறுகிறான். நாணன் முன்செல்ல அவன் பின் அன்பு செல்லுகிறது. அன்பின் பின்னே திண்ணன், மலைப்படிகளென்னும் தத்துவப் படிகளை ஏறிச் செல்லுகிறார். இவ்வாறு செல்லும் போழ்தில், திண்ணன் 'திங்கள் சேர் சடையார்தம்மைக் காண்பதன் முன்னே" சிவபெருமான் கருணையோடு திண்ணனை நோக்கினார். உடனே திண்ணன், 'முன்னைச் சார்பு விட்டகல நீங்கி' ஒளியின் நீழலாய் அன்புருவம் எய்தினார்; பலைக்கொழுந்தெனத் திகழும் ஏகநாயகரைகாண்கிறார். அன்பின் பெருக்கால் விரைந்து ஓடுகிறார்; மாதேவனைக் கட்டித் தழுவுகிறார்; பெருமூச்சு விடுகிறார். 'மயிர்க்கால் தோறும் வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணில் அருவி பாய, அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ!' என்று கூறுகிறார். ஆனந்தக் கூத்தாடுகிறார். பக்திப் பெருக்கில் தன்னை மறந்தார். 'இது கரடி' வேங்கை முதலிய கொடிய விலங்கினங்கள் உலவும் கானகமாயிற்றே! இங்கே 'வெம்மறக் குலத்து வந்த வேடுவர்' போல, ஐயன் தனித்திருப்பதோ? ஐயகோ! யாரும் அவருக்கு இங்கு துணை இல்லையே! கெட்டேன்! கெட்டேன், என்று உள்ளம் நைந்து உருகுகிறார்.

திண்ணனார் கையில் வைத்திருந்த வில் நழுவி விழுந்தது. அதுவும் அவருக்குத் தெரியவில்லை. சிறிது தெளிவு பெற்றார். 'இவர் முடிமீது நீரினை வார்த்துப் பச்சிலையோடு பூவும் பறித்து இட்டுச் சென்றவர் எவரோ? என்று கூறிச் சுற்று முற்றும் பார்க்கிறார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த நாணன்,

'அதுயார் என்பதை நான் அறிவேன்; முன்பொருநாள் தங்கள் தந்தையாரோடு வேட்டையாடி இங்கு வந்தோம். அப்பொழுது, ஒரு பார்ப்பான் இவர்மீது நீர்வார்த்துப் பச்சிலைகளையும், மலர்களையும் சூட்டினான்; உணவும் ஊட்டினான். இவர் முன் நின்று ஏதோ சில சொற்களையும் சொன்னான். இன்றும் அவன் தான் இச்செயலைச் செய்திருக்க வேண்டும்' என்றான்.

(8-ம் பக்கம் பார்க்க)

பழச்சாறும் வழிபாடும்

நாம் பழச்சாறு அருந்துவதனாலேயே பலன்பெற முடியாது; அப்பழச்சாறு சீரணிக்கிற தகுதி உடலுக்கிருந்து சீரணித்தாலேயே பலன் கிடைக்கும். அதுபோல, நாம் செய்யும் வழிபாட்டாலேயே நாம் எதிர்பார்க்கும் பலன் கிடைத்து விடாது. வழிபாட்டின் வழியாகக் கிளர்ந்தெழும் உணர்வுகளைப் பாதுகாத்துக் கொண்டு அனுபவிக்கும் இயல்பு நம்முடைய மனத்திற்கு இருந்தாலேயே பலன் கிடைக்கும்.

-அடிகளார்

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்
அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 4] 11-2-63 [இதழ் 12

நாட்டு மக்களின் நல்லெண்ணத்தை வளர்க்க

'கொள்' என்று கூறினால் வாயைத்திறப்பதும், 'கடிவாளம்' என்று கூறினால் வாயை மூடிக்கொள்வதுமாக இருப்பது குதிரையின் குணம்; இந்தப் பண்பு குடியரசு நாட்டு மக்கட்குக் கண்டிப்பாக இருக்கக் கூடாத ஒன்று. கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் இணைந்த ஒட்டுறவு கொண்டிருப்பது போல் நாட்டின் வாழ்விலும் தாழ்விலும் நாட்டுமக்கள் இணைந்து பங்குகொள்வதே ஏற்றமுடையதாகும். குடியரசு நாட்டுமக்கட்கு இன்றியமையாத பண்பும் ஆகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு – கடந்த 15 ஆண்டுகளில் நாம் பெரியதொரு ஏற்றத்தை – மாற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இன்று, நாட்டின் தொழில் வளர்ச்சியோடு, நாட்டுப்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஒருசேரக் கவனிக்கவேண்டிய அவசரநிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டும். நம்மினும் நாடு உயர்ந்தது – நாடு வாழ்ந்தால் நாம் வாழ்வோம் – நாடு வீழ்ச்சியுற்றால் நாமும் வீழ்ச்சியுறுவோம் என்ற உணர்வு வேண்டும்.

இன்னும் சில நாட்களில் மத்திய அரசின் வரவு செலவு (BUDJET)த் திட்டமும் மாநில அரசின் வரவு செலவுத் திட்டமும் வெளியாக இருக்கின்றன. திட்டம் வெளியானதும், மக்கள் பல புதிய வரிகளை ஏற்க வேண்டியிருக்கும் என்பதிலே கருத்துவேறுபாடிருக்க முடியாது. அதுபோல, இந்த நாட்டின் வாழ்விலும், தாழ்விலும் பங்குபெறும் பொறுப்பும், உரிமையும் உடைய மக்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும் தேவையான எதையும் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும் என்பதையும் மறுக்கமுடியாது. மேலும், இதுகாறும் நாம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மட்டுமே வரிகள் கொடுக்க வேண்டியிருந்தது; இன்றைய நிலையில் நாட்டின் பாதுகாப்புக்காகவும் ஏராளமான பொருள் தேவை என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.

அண்மையில், நமது மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் சென்னைக்கு அருகேயுள்ள எண்ணூரில் இரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், "தேசத்தின் தொழில் வளர்ச்சியையும் தேசப்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஒருசேரக் கவனிக்க வேண்டியுள்ளது; ஆகவே அடுத்துவரும் வரவு செலவுத் திட்டம் எதும் வரிச்சுமையைத் தாங்கி வந்தாலும் உற்சாகம் ஓரளவும் குன்றாமல் எடுத்த காரியத்தைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும்; மனத்தை இரும்பாக்கிக் கொண்டு, தேச நலனுக்காக எத்தகைய சுமை வரினும் ஏற்போம் என்ற உறுதியுடன் நாம் பாடுபடுவோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இதனை இந்நாட்டு மக்கள் நன்றாக மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும்; வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் சிக்கனத்தைக் கையாண்டு, ஒல்லும் வகையெல்லாம் உதவ முன்வரவேண்டும். அதே சமயத்தில், மக்கள் நலன் வேண்டும் நமது அரசாங்கமும் வரிவிதிப்பு ஒன்றுதான் வழி என்று கருதாமல், கடனுதவி, சேமிப்பு – கடன்வாங்குவது முதலிய வேறுபல வழிமுறைகளையும் கையாள வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம், நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும், நாட்டின் நல்வாழ்வில் அவர்கள் கொண்டிருக்கிற அக்கறையையும் மேலும் வளர்க்கமுடியும். — துணை ஆசிரியர்.

வழிவழி அன்பைப் போற்றியவர் நாம்

சீனத் தலைமையின் ஆணவப் போக்கு நம்மை போர்க்களம் நோக்கிப் புறப்படச் செய்துள்ளது

சிவகெங்கை என். ஜி. ஓ. சங்கத்தினரின் சேவை வார விழாவில் தவத்திரு அடிகளார்

நம்முடைய புதிய சமுதாயத்தை உருவாக்கும் திருப்பணியில் அடித்தளமாக இருப்பவர்கள் ஆசிரியர்களும், அரசாங்கப் பதிவில்லாத அலுவலர்களுமாவர். பழைய கால மனோபாவங்கள் இன்னும் மூலை முடுக்குகளில் குடியிருக்கத்தான் செய்கின்றன. எனினும் புத்திசாலித்தனம் நம்முடைய வழிவழிச் சொத்து. நம்மவர்கள் விரும்பினால், ஆற்றைத் திசைமாற்றிவிட முடியும்; மலையையே கூட இடம் மாற்ற முடியும். ஆனால், மனமில்லையானால் படுத்தால் கூட எழுந்திருக்க மாட்டார்கள். இனிய துயில் கொள்ள ஆரம்பித்துவிடுவார்கள். நம்முடைய காரியங்களில் ஆர்வமும்—நிறைவேற்றும் உறுதியும் காட்ட வேண்டும்.

வழிவழியாக அகிம்சை, அன்பு நெறிகளைப் போற்றிவந்த நாம், இந்த 20-ம் நூற்றாண்டிலே துப்பாக்கியை ஏந்திப் போர்புரிவோம் என்று கனவுகூடக் கண்டதில்லை. இப்படி நாம் கூறுவதால், நாம் கோழைகள் என்று பொருளில்லை. போர் தவிர வேறு நிகழ்ச்சியில்லை என்ற வரலாற்றைப் படித்துப் போரின் மீது நமக்குப் பெரும் வெறுப்பு ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

அமைதியையே நாம் பெரிதும் விரும்பினோம் - விரும்புகிறோம். சீனத் தலைமையின் ஆணவ வெறிப்போக்கு நம்மைப் போர்க்களத்தை நோக்கிப் புறப்படும்படி செய்திருக்கிறது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உலகத்தின் சூழ்நிலை நம்மைப் போரில் ஈடுபடும்படி செய்திருக்கிறது.

நாட்டின் இன்றையச் சூழ்நிலையில். அரசாங்கப் பதிவுபெறாத அலுவலர்களின் பொறுப்பும் கடமையும் மகத்தானவை. வாயில்லாத—வலிமையில்லாத மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் பெட்டகம் போல, அரசாங்கப் பதிவு பெறாத அலுவலர்கள் விளங்க வேண்டும். நாட்டுமக்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொடுக்கின்ற முயற்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் எத்தகைய துன்பங்கள், இடர்ப்பாடான சூழ்நிலைகள், வலுக்கட்டாயங்கள் ஏற்பட்டாலும் ஒரு சாதாரண மனிதனின் நலத்திற்குக் குந்தகம் ஏற்படும்படி எழுதுவதற்கு நிச்சயமாகப் பேனாவைத் தொடமாட்டோம் என்று நீங்கள் உறுதிஎடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் வாழ்க்கையில் எவ்வளவோ சிக்கல்கள் இருந்தாலும், அவை உங்கள் சேவையில் குறுக்கே நிற்க அனுமதிக்கக் கூடாது. பொதுவாக எப்பொழுதும் வேலையும் கூலியும் தம்முள் ஈடாகாது. இரண்டுக்கும் சம்பந்தமில்லை. நமது சக்திக்கேற்ற உழைப்பை நல்குவதில் ஒளிவு மறைவு கூடாது. தயக்கம் இருக்கக்கூடாது. உங்கள் தேவைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் அக்கறை காட்டிவருகிறது. இனி மேலும் செய்யும்.

தமிழகத்திலுள்ள அரசினர் பதிவுபெறாத அலுவலர்களின் கட்டுப்பாடு, கண்ணியம், கடமையுணர்ச்சி, தரம், தகுதி இவை அனைத்

(12ம் பக்கம் பார்க்க)

உங்கள் வாழ்க்கையின் சிக்கல்கள் சேவையில் குறுக்கே நிற்க அனுமதிக்காதீர்கள்

பரிசுக் கட்டுரை

புதிய பாரதம்

[குடியரசு தினத்தையொட்டி குன்றக்குடி அடிகளார் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற மாணவர் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசுபெற்ற கட்டுரை. இக் கட்டுரையை எழுதிய மாணவி, செல்வி பழ. ஆண்டாள் எட்டாம் வகுப்பில் பயிலுபவர்.]

—துணை ஆசிரியர்

சுதந்திரத்திற்கு முன் நாம் அன்னியர் ஆதிக்கத்திற்கு அடிமைப் பட்டு அல்லலுற்ரேம். பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசந்தன்னை வாழ்விக்கவந்த மகாத்மாவால் 1947ல் சுதந்திரம் பெற்ரேம். நாம் சுதந்திரம் பெற்று விட்டோம்; பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது ஒவ்வொருவரது கடமையாகும். நாம் சுதந்திர பாரத சமுதாயத்தை ஒன்றுபட்ட-பண்பின் வழிப்பட்ட துறைகளில் செழுமைப் படுத்தி வளர்க்க முயற்சித்துக் கொண்டிருக்கிரேம். ஒன்று மக்களாட்சி. -மற்றையது கூட்டுறவு வாழ்க்கை. நாடு, எல்லே, மொழி, இனம் ஆகியவேற்றுமைகளே யெல்லம் கடந்து மனிதகுலம் என்ற அடிப்படையில் ஓர் ஒருமைப்பாட்டைக் காண்கிரேம். பாரத தேசம் பலதுறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

கல்வி:-

அன்னியர் ஆட்சியில் பெரும் பான்மையோர் கல்வியறிவற்றவர்களாக இருந்தார்கள். சுதந்திரத்துக்குப் பின் நம் நாடு கல்வித் துறையில் முன்னேற்றப் பாதையை அமைத்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்விச் சலுகைகள் அளிக்கப் பட்டுக் கல்வியில் முன்னேறியுள்ளனர். பொருளாதாரம் குறைவுள்ள சிறுவர்களுக்கு இலவசக் கல்வி, இலவசத் துணி, நண்பகல் உணவு, இலவசப் புத்தகங்கள் அளிக்கப் படுகின்றன. நம் நாட்டுப் பெண்கள் நல்வாழ்வு, உரிமை பெற்ற வாழ்வு, ஒத்தவாழ்வு வாழ வேண்டும். இதற்குப் பெண்கல்வி இன்றியமையாததாகும். மேலும் ஒரு பெண் படித்திருந்தால் தன்னுடைய குழந்தைகளுக்கு நன்கு கல்வியறிவைப் புகட்டி நன்முறையில் பேணிப் பாதுகாப்பாள். மேலும் அவர்களுக்கு ஒழுக்கம், பண்பாடு, அன்பு, அறிவு ஆற்றல் முதலியவைகளேக் கற்றுக் கொடுப்பாள். நாடு சீராகக் குடும்பம் சீராக வேண்டும். குடும்பம் சீராகப் பெண்களுக்குப் படிப்பு வேண்டும். ஆண்படித்தால் தனியாள் படித்ததாகும். பெண் படித்தால் குடும்பமே படித்ததாகும். இன்று பெண்கல்வி பல வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

வாக்குரிமை:-

நம் சுதந்திர நாட்டில் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும் வாக்குரிமை பெற்றிருக்கிரேம். அவ்வாக்குரிமையை முறையாகப் பயன் படுத்துவது வாழ்க்கையின் இன்றியமையாத கடமையாகும். வாக்குரிமை பெற்றிருக்கும் ஒருவன் தனது வாக்கைத் தான் விரும்பிய ஒருவனுக்கு வழங்குகின்ற சூழ்நிலே இன்று இருக்கிறது. ஆதலால் தான் விரும்பியபடி நன்கு சிந்தித்து ஒரு சிறந்த- ஆளுந்தகுதியுடைய தலேவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் பொறுப்பும் இருக்கிறது.

தொழில்:-

இன்று பல இயந்திரத் தொழில்கள் பெருகியுள்ளன. கட்டும் துணிக்காகவும் உயர்ந்த மற்றையப் பொருள்களுக்காகவும் பிறநாட்டை எதிர்பார்த்து வாழ்ந்த நாம் இன்று அந்நாட்டிற்கே ஏற்றுமதி செய்யும் அளவு உயர்ந்துள்ளோம். இயந்திர அறிவு எள்ளளவும் இல்லாதிருந்த நாட்டில் இன்று பல இயந்திரங்களே உற்பத்தி செய்து அவற்றை உலக நாடுகளுக்கு அனுப்பி இயந்திரப் புரட்சியை உருவாக்கி யுள்ளோம். மேலும் ஆலேத் தொழில் நீர்ப்பாசன அணைக் கட்டுத் தொழில்கள் பெருகியுள்ளன.

தமிழ் வளர்ச்சி:-

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணேம் என்ருர் பாரதி. நாகரிகமிக்கநாடுகள் எனப் போற்றப்படும் பழம்பெரும் நாடுகள் பலவற்றில் நமது தமிழகம் தனிச் சிறப்பு வாய்ந்தது. தமிழினம் சிறப்புற்று விளங்கத் தமிழ் வளர்ச்சியுற வேண்டும். அரசாங்கமும் தமிழுக்கு முதன்மையிடம் அளித்திருக்

கின்றது. தமிழை ஆட்சி மொழியாக்கி அரியணையில் ஏற்றியது. மற்றும் சட்டமன்றம், பாராளுமன்றம், நீதி மன்றம் முதலிய அலுவலகங்கள் பலவற்றில் தமிழ் கையாளப் படுகிறது. கல்லூரிகளில் அறிவியற்கலை தமிழில் போதிக்கப் படுகிறது. ஆலயங்களில் தமிழ் வழிபாடு முழங்குகிறது.

திட்டம்:-

தனிமனித வாழ்க்கையிலும் சரி, சமுதாய வ ழ்க்கையிலும் சரி திட்டமிட்டுச் செய்தால் தான் முன்னேற்றம் காண முடியும். திட்டமில்லாத வாழ்க்கை செவ்வனே நடைபெருது. சுதந்திரத்திற்கு முன் நாட்டில் திட்டம் கிடையாது, சுதந்திரத்திற்குப் பின் ஐந்தாண்டுத் திட்டம் பலவற்றில் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேற்றம் கண்டு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் நடை முறையில் கொண்டுவரப் பட்டிருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் வறுமை, அறியாமை, படிப்பின்மை முதலியவை நம் நாட்டை விட்டு அகன்றன.

சாதி:-

சாதி இரண்டொழிய வேறில்லை என்றும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றும் பல பாடல்கள் பகர்கின்றன. சாதி வேற்றுமை நம் நாட்டில் பெரிதும் பரவியிருக்கின்றது. இதை ஒழிக்க வேண்டும். இவ்வேற்றுமையை உடனடியாக ஒழிக்க முடியாது. சிறிது சிறிதாகத் தான் அகற்ற வேண்டும். இன்று பல அறிஞர்களும் பெரியார்களும் சாதி வேற்றுமை அகலவேண்டும் என்று மேடைகளில் முழங்கியும் செயலில் செய்தும் வருகின்றனர். கலப்பு மணங்கள் நடைபெற்றும் வருகின்றன. ஆதலால் சாதிப் பேயை இந்நாட்டைவிட்டு விரட்டி விடலாம். எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் இந்திய மக்கள் என்று கூறும்படி செய்யவேண்டும். கற்றவர் இதை நாட்டுப்பணியாகக் கருதி முன் வந்தால் சாதி வேற்றுமையை ஒழித்துச் சீர் திருத்த சமுதாயத்தைஉருவாக்கலாம்.

முடிவுரை:-

நம் நாடு முன்னேற்றமடைந்த அளவு போதாது. இன்னும் பல துறைகளில் முன்னேற வேண்டும்.

Opportunity for all

என்றபடி யார் யாருக்கு சோஷலிச சமுதாயத்தில் என்னென்ன திறமைகள்இருக்கின்றனவோ அதைப் போற்றி வளர்க்க வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து எல்லோருக்கும் வாய்ப்புக்களை வழங்குகின்ற சோஷலிச சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும். இரண்டாவது, தேசிய ஒருமைப் பாட்டுணர்ச்சியை வளர்க்கவேண்டும். அன்று சுதந்திரம் பெறுவதற்காகப் போர்நடத்திஞேம். இன்று பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்பதற்காகப் போரிடுகிருேம். இந்தியாவில் எல்லையில் சீனன் என்ற நச்சுப் பாம்பு இருக்கிறது. அதனை இந்நாட்டை விட்டு விரட்ட வேண்டும். அதற்குப் பெண்கள் தங்களிடம் உள்ள பணம் தங்கம் சொத்து முதலியவைகளையும் கொடுத்துக் தம் கணவன்மார்களுக்கு குழந்தைகளுக்கும் உற்சாகம் ஊட்டி களத்திற்கு அனுப்ப வேண்டும். ஆகையால் யாவரும் சாதி வேற்றுமையை மறந்து எல்லோரும் ஒரு குடும்பமாகப் பாவித்து ஒன்று சேர்ந்து அனைவரும் சீனரைத் தாக்குவோமாஞல் சீனரின் வஞ்சக வலையில் இருந்து தப்பி உலகநாடுகள் பலவற்றிலும் நம் இந்தியா தலைசிறந்து மிளிரும் என்பதில் ஐயமில்லை.

அடிகளார் சுற்றுப்பயணம்

பிப்ரவரி 63

15. கடலங்குடி (தஞ்சைமாவட்டம்)
16. குன்றக்குடி
17. மதுரை
அருப்புக்கோட்டை
18. சிவகெங்கை
19. திருப்புத்தூர் (இராமநாதபுரம்)
மதுரை
20 பூவாளூர்
21. பண்ணைக்காடு

செய்திச் சுருள்

சிவகெங்கை
என். ஜி. ஓ. சங்கம்

தமிழ்நாடு அரசினர் பதிவு பெருத ஊழியர்களின் சிவ கெங்கை கிளையின் சார்பில், சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பும் சேவை வாரமும் 30-1-63முதல் 5-2-63 வரை கொண்டாடப் பெற்றது. விழாவின் நிறைவு நாள் 5-2-63 மாலை 7 மணி அளவில் திருப்புத்தூர் டிப்டி தாசில்தார் திரு. கே. சி. வேலாயுதம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமிழ்நாடு அரசினர் பதிவுபெருத ஊழியர்களின் கடமைகளையும், பொறுப்புக்களையும் விளக்கினுர்கள். பொதுச்செயலர் திரு. பூரணலிங்கம், திரு. ஆர். எஸ். சேஷாத்திரி அய்யர் திரு. கூடலரசன் ஆகியோர் பேசினுர்கள். செயலர் நன்றிகூறினுர்.

அ. நெ. திருக்கூட்டம் வார வழிபாடு

மன்னுர்குடி அருள்நெறித் திருக்கூட்டத்தின் முதல் வார வழிபாட்டுவிழா 2—2—63ல் நடைபெற்றது. அன்பர்கள் அனைவரும் ஒத்தைத்தெரு விநாயகர் கோவிலில் கூடி விநாயகப்பெருமானை வழிபட்டுப் பின்னர் இளங்கோ மன்றக்கட்டிடத்தில் கூடினர் கும்பகோணம் சங்கீத வித்துவான் திரு ப. சுந்தரேசன் அப்பரடிகளின் கயிலை போற்றித் திருத்தாண்டகத்தைப் பாடியருளினுர்.

பின்னர் அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் திரு. அ. நடேச முதலியார் 'கண்ணப்பர்' என்னும் பொருள்பற்றி அரியதோர் உரைநிகழ்த்தினுர். செயலர் திரு. இராமச்சந்திரன் நன்றிகூறினுர்.

திருவாரூர்
திரு. வி. க. படிப்பகம்

திருவாரூர். திரு. வி. க. படிப்பகத்தின் முதலாவதாண்டு நிறைவுவிழா 3-2-63ல் திரு. எஸ். டி. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. திருவாரூர் த. கே. க. பொருளாளர் திரு. தி.கோவிந்தராசன், என் எஸ். இளங்கோ, டி. வெங்கடாசலம், ஆர். சந்தானம், இரா. தியாகராசன் ஆகியோர் பேசியபின் தவத்திரு அடிகளார் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினுர்கள். திருவாரூர். த. தே. க. செயலர் திரு. இரா விசுவநாதன் நன்றி கூறினுர்.

வாழ்த்துகிருேம்

தஞ்சை 'மாலைமுரசு' நிருபர் திரு. ஆர். இலட்சுமணன் அவர்களின் இளவல் செல்வன் கோவிந்தராஜுலுவுக்கும் திரு. ராம்தாஸ் நாயுடு மைத்துனி செல்வி சுப்புலட்சுமிக்கும் 3...2...63ல் தஞ்சையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், மாலைமுரசு நிருவாக இயக்குநர் திரு. பா ரா. ஆதித்தன் ஆகியோர் முன்னிலையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கட்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

★

திரு. வெ. ச. சுப்பிரமணியனுக்கும், கள்ளப் பெரம்பூர் (லேட்) முத்தண்ண நாட்டார் புதல்வி செல்வி வசந்தாவுக்கும் 6-2-63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திரு. துரையரசன், அன்பில் தருமலிங்கம் ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசினுர்கள்.

மணமக்கட்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

திருப்பூர்
அருள்நெறி வார வழிபாட்டுத் திருக்கூட்டம்

திருப்பூர் அருள் நெறி வார வழிபாட்டுத் திருக்கூட்டத்தின் ஒன்பதாம் ஆண்டு மாநாடு, நகர சிவாலயத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் திரு. கே. ஆர். ஈ. ஆறுமுகம்

(9-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வுரை கேட்ட திண்ணன், இவை இறையனார்க்கு இனியன போலும் என்று கருதி, அங்கிருந்து செல்ல மனமின்றி, 'ஐயகோ' இங்கு இவர் தனித்திருக்கிறார்; இவருக்கு இறைச்சியும் அளிப்பாரில்லை. இவரைப் பிரிந்து செல்வதும் இயலாது. என் செய்வது! இவருக்கு இறைச்சி கொணர்ந்தேயாக வேண்டும். என்று நினைந்து சிறிது தூரம் செல்வார்; மீண்டும் திரும்பி வந்து தழுவிக் கொள்வார். திரும்பவும் செல்வார். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்பார். கன்றினை விட்டகலும் தாய்ப்பசுப்போல் ஆவார். "ஐயனே! இங்கே உனக்குச் சுற்றத்தார் எவரும் இல்லை. உன்னைப் பிரிந்து செல்லவும் மனம் வரவில்லை. நீ பசியோடு இருக்கவும் என் மனம் பொறுக்கவில்லை நீ அமுதுண்ண நல்ல இறைச்சியை நானே கொணடுவருகிறேன்" என்று கூறி கண்களில் அருவி பாய, வில்லினைக் கையில் ஏந்தி அம்மலையினின்றும் இறங்கிச் சோலையை வந்தடைந்தார். நாணனும் தொடர்ந்து வந்தான்.

சோலையில் இருந்த காடன் திண்ணனைப் பணிந்து, 'இவ்வளவு நேரம் தாழ்த்தது என்னை?' என்று கேட்டான். நிகழ்ந்ததனைத்தையும் நாணன் நவின்று, குடுமித் தேவர்க்கு இறைச்சி கொண்டு செல்லுவதற்காக இவர் இங்கே வந்திருக்கிறார்; இவர் நமது குலத் தலைமையை விட்டுவிட்டார்; 'நலப்பட்டார் தேவர்க்கு' என்றான், காடன் இதைக் கேட்டதும், 'என்செய்தீர் திண்ணனாரே என்ன பித்துக் கொண்டீரோ நீர்? எங்கள் குலத் தலைவர் அல்லரோ நீர்? என்றான்.

வேடுவர் பெருமானான திண்ணன் காடனின் முகத்தையே பார்க்காமல், பன்றியை நெருப்பிலிட்டு வதக்கி அதன் இறைச்சியைப் பதம் செய்கிறார். வெந்த இறைச்சியினை வாயிலிட்டு அதுக்கி, இனியவற்றைச் சருகிலை இணைத்த கல்லையில் வைக்கிறார். வேகாதவற்றைப் புறத்தே துப்புகிறார். இதனைக் கண்ணுற்ற நாணனும், காடனும் 'இவருக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டது; இவர் பசியால் பீடிக்கப்பட்டிருக்கிறார் எனினும் இறைச்சியை உண்ணாமல் வீணாக இலைக் கலத்தில் இடுகின்றார்; புறத்தே எறிகின்றார். நமக்கும் தருகிறார் இல்லை. இவர் கடவுட் பித்துக் கொண்டிருக்கிறார். நாம் என்ன செய்ய இயலும்? நாகனையும், தேவராட்டியையும் அழைத்துவருதல் வேண்டும். காட்டுக்குச் சென்று நம்முடன் வந்த ஏனையோரையும் அழைத்துச் செல்வோம்' என்று கூறி அங்கிருந்து ஏகினர்.

நாணனும் காடனும் சென்றது, சிவத்தில் ஈடுபட்டிருக்கும் திண்ணனுக்குத் தெரியாது. அவர், வெந்த இறைச்சியை இலைக்கலத்திட்டார். திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டுபோக வேண்டுமே, அதற்கென்ன செய்வது? நீர் முகந்து செல்லக் கலமேதும் இல்லை. பொன்முகலியாற்று நீரை வாயிலே முகந்து சென்றார். பச்சிலைகளையும் மலர்களையும் பறித்துக் குடுமியிலே செருகினார். வில்லையும் அம்பையும் ஒருகையில் ஏந்தினா. இறைச்சி வைத்த இலைக் கலத்தை இன்னொரு கையில் ஏந்தினார். எனக்கினிய இறைவன் மிகவும் பசியோடிருப்பார் என்று மனமிரங்கி, விரைந்து நடந்து மலையினை அடைந்தார் சிவபெருமானின் திருமுடியில் ஏற்கெனவே அருச்சிக்கப் பெற்றிருந்த மலர்களைக் கால் செருப்பால் மாற்றினார். வாயிலே நிரப்பி வந்த நீரைத் திருமுடி மீது உமிழ்ந்தார். தன் குடுமியிலே செருகிக் கொணர்ந்த மலர்களை இறைவனுக்குச் சாத்தினார். தான் வாயிற்போட்டு அதுக்கித்தேர்ந்தெடுத்த ஊனமுதை இறைவனின் திருமுன் படைத்தார். 'இறைவா! இந்த இறைச்சிகள் மிக நல்லன— இவற்றை யானே சுவை பார்த்துத் திருமுன் படைத்துள்ளேன்; அமுது செய்து அருள வேண்டும்' என்று கூறினார்.

கதிரவன் மறைந்தனன்— காரிருள் பரவியது 'கொடிய விலங்கினங்கள் இரவிலே ஐயனுக்குக் கொடுமைபுரியுமே' என்று கருதி அஞ்சிச் சிலையினைக் கையிலேந்திச் சிவபெருமானை நோக்கி நின்றார். காடுகளிலும் மலைகளிலும் தேவர் கடுந்தவம் புரிந்த நாணுகளும் முனிவர்களும் தற்குரிய இறைவனைத் திண்ணன் அன்பினிற் கண்டார்.

(வளரும்)

நாமும் உலகமும்

பெரும்பான்மையான உலக நாடுகளில் சுதந்திரப் புரட்சிக்குப் பிறகு பசியும், பட்டினியும் மிகுந்திருந்ததாகத்தான் வரலாறு உண்டு; நமது நாட்டைப் பொறுத்தவரையிலே சுதந்திரம் பெற்றகாலத்திலிருந்தே அத்தகைய துன்பகரமான சம்பவங்கள் எதையும் நாம் அனுபவிக்காதது மட்டுமின்றி, முன்னேறியும் வந்திருக்கிறோம்.

--அடிகளார்

அப்பர் அளிக்கும் விருந்து

எங்கும் இறைவன்

இறைவன் அன்பின் உருவம்; அருளின் வடிவம். அவன் அங்குதான் இருக்கிறான், இங்கே இல்லை என்று கூறமுடியாதபடி எங்கும் நிறைந்திருக்கிறான். உலக உயிர்களிடத்துப் பரிவும் பாசமும் காட்டுதல் இறைவழிபாட்டின்பாற்பட்டதே. அத்தகு தூய முறுகிய அன்பில்லாமல், கங்கையிலும் காவிரியிலும் நீராடுவதால் மட்டும் என்ன பயன்? இதனை அப்பரடிகள் கேட்பதைப் பாருங்கள்.

"கங்கை ஆடிலென்? காவிரி ஆடிலென்?
கொங்கு தண்குமரித்துறை யாடிலென்?
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்?
எங்கும் ஈசனெனா தவர்க் கில்லையே!"

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

கொடியேற்றிவைத்தார். செயலர் திரு. ஏ. சி. பழனியப்ப செட்டியார் அனைவரையும் வரவேற்றார். உதவிச் செயலர் திரு. சி. ஏ. ஞான சுந்தரம் நன்றிகூறினார்.

இரண்டாம் நாள் விழா, சட்டசபை உறுப்பினர் திரு. கே. என் பழனிச்சாமி கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. திரு. ஆர். சுப்பிரமணியம் மாநாட்டைத் துவங்கி வைத்தார். 'மரணம் இல்லாப் பெருவாழ்வு' என்ற தலைப்பில் திரு. கி. வா. ஜகந்நாதன் பேசினார். திரு. ராய சொக்கலிங்கன் சிவபெருமானும் கம்பநாடனும் என்ற தலைப்பில் பேசினார்.

மூன்றாம்நாள் விழா கோவை அறநிலையப் பாதுகாப்புத் துறை துணை ஆணையர் திரு கே கே. மேனன் தலைமையில் நடைபெற்றது. நாகர்கோயில் திரு. ஆறுமுக நாவலர் கிருஷ்ணன் தூது என்ற தலைப்பில் பேசினார்.

நான்காம் நாள் மகளிர் மாநாடாக நடைபெற்றது. திருமதி கே. சி. டி. முத்துலட்சுமி தலைமையில் திருமதி கோமதி அம்மையார், திருமதி மா. கஜலட்சுமி அம்மையார் ஆகியோர் பேசினர்.

ஐந்தாம் நாள் நிகழ்ச்சி திருப்பூர் மாவட்ட முன்சீப் திரு. ஜி. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. திரு. வெ. ராமசாமி அய்யர் பேசினார். மதுரை இசைமணி சோமசுந்தரம் குழுவின் இன்னிசை நிகழ்ச்சிக்குப்பின் திரு. ஏ. சி. பழனியப்ப செட்டியார் நன்றிகூற விழா இனிது நிறைவெய்தியது.



கேளுங்கள் சொல்லுகிறோம்

—— அடிகளார் ——

கேள்வி:

ஒரு இடத்தில் இடைத்தேர்தல் நடக்க இருந்தால் முன்பு இருந்த கட்சியைச் சேர்ந்த நபரையே தேர்ந்தெடுக்க எல்லா அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும் என்ற காமராஜரின் சமரசத் திட்டம் பற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்:

கால நிலைமைக் கேற்ற நல்ல திட்டம்

கேள்வி:

விலைவாசி உயர்வைத் தடுப்பதற்குச் சரியான வழி எது?

பதில்:

மனிதனுடைய தேவை பெருகியுள்ளது தேவைக்கேற்றவாறு உற்பத்தி பெருகவில்லை. உற்பத்தி பெருகினால் விலை குறையும். மேலும் பொருளை உற்பத்தி செய்பவருக்கும் வாங்கி உபயோகிப்போருக்கும் இடையில் எண்ணற்ற இடை வியாபாரிகள் உள்ளனர். இது முறையல்ல. இடைவியாபாரிகளின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்க வேண்டும். மேலும் மனிதனின் சராசரி வருமானத்தை உயர்த்தி வாங்கும் சக்தியைக் கூட்டவேண்டும்.

கேள்வி:

'பிரிவினைத் தடை' பற்றிப் பேச வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு அறிஞர் அண்ணாதுரை அறிக்கை விட்டிருப்பது எதைக் காட்டுகிறது?

பதில்:

வேலூர் சிறையில் சிறை மேலாளர்கள் அறிஞர் அண்ணாதுரையிடம் ராட்டையைக் கொடுத்து நூற்கச் சொன்னார்கள். அண்ணல் காந்தியடிகளின் மந்திர ராட்டை யல்லவா? ராட்டையைத் தொட்ட நாளிலிருந்து அவருடைய போக்கில் அதிசயிக்கத் தக்க மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அதனாலேயே பொறுமையின் வழி நின்று அவர் பேசுகிறார்.

கேள்வி:

1965ம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலம் தொடர்ந்து நீடிப்பது இந்திக்கு மட்டுமல்ல தமிழ்வளர்ச்சிக்கும் பெரிதும் தடையாக இருக்கும் என்று ஜனசங்கக் கட்சியின் தலைவர் டாக்டர் இரகுவீரா கூறியிருக்கிறாரே, அதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்:

இதிலும் உண்மையுண்டு. பயிற்சி மொழியாக இந்தி வருவதை ஏற்க முடியாது. தமிழ் வரும். ஆங்கிலம் இருந்தால் தமிழ் பயிற்சி மொழியாக வராது.

கேள்வி;

மனித வாழ்க்கைக்கு முக்கியமானது எது?

பதில்:

இன்ப அன்புணர்வோடு பழகும் பண்பே முக்கியமான தேவை.

கேள்வி;

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரே நீடித்து இருக்கட்டும்; தமிழ் நாட்டில் இருக்கும் அவர்கள் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடட்டும்! அப்போது ஆட்சிக்கு வேண்டுமானாலும் வரலாம் என்று தமிழகச் சட்டமன்றத்தில் நிதியமைச்சர் பக்தவத்சலம் கூறியதாக ஒரு செய்தி வெளியாகி யுள்ளதே, அதன் கருத்தென்ன?

பதில்:

மிக நல்ல யோசனை. நடைமுறையைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

'தமிழகம்' தரும்
புத்தாண்டுப் பரிசு

தவத்திரு அடிகளார் அவர்களின் எழுத்தோவியங்களையும், சொற்பொழிவுகளையும் தாங்கி வெளிவரும் தமிழகத்தின் ஆண்டுச் சந்தா ரூ 5. வருகிற புத்தாண்டுப் பரிசாகத் தமிழகத்தின் ஆண்டுச் சந்தாவை ரூ 3 ஆகக் குறைத்திருக்கிறோம். வருகிற சித்திரை முதல் நாளுக்குள் சந்தாக் கட்டுகிறவர்கள்

ரூபா மூன்று மட்டும்

கட்டினால் போதும். ஓராண்டுக்குத் தமிழகம் தொடர்ந்து கிடைக்கும். இந்தப் புத்தாண்டுச் சலுகையை எத்தனைபேர் பெறப்போகிறீர்கள்? எங்கே பார்க்கலாம்,

......மேலாளர்......

'தமிழகம்' — குன்றக்குடி
(இராமநாதபுரம் மாவட்டம்)

★

தீவிபத்து
பாதிக்கப்பட்டோர்க்கு அடிகளார் உதவி

காரைக்குடியை அடுத்த சூரக்குடி கிராமத்தில் உள்ள ஆதி தமிழர் குடியிருப்பில் 3—2—63 பகல் 2 மணி அளவில் தீப்பிடித்து 32 வீடுகள் சாம்பலாயின. மொத்தம் ரூ 4 ஆயிரத்து 500 ரூபாய் வரை சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தீவிபத்தில் பாதிக்கப் பெற்றவர்களுக்கு தவத்திரு அடிகளார் அவர்கள் நேரில் சென்று ஆறுதல் கூறி வேட்டி துண்டு, சேலை, அரிசி ஆகியவை வழங்கினார்கள்.

★

திருவாசகம்

திருவாசகம் தமிழகத்தின் தவநூல்! ஞானப்பனுவல்; பக்திப் பெருநூல்; தத்துவக் கருவூலம்; அறிவுக் களஞ்சியம்; பிறவிப் பிணி தீர்க்கும் பெருமருந்து; நெஞ்சை நெகிழ்விக்கும் செந்தமிழ்ப் பாட்டு; மடுவனைய வாழ்க்கையிலிருந்து மலையனைய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் அருட்பாட்டு அதை ஓதிஉணர்ந்து அனுபவியுங்கள்.

... அடிகளார்

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 11-2-63

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் பெரிதும் பாராட்டுக்குரியன. எனினும், இவற்றை யெல்லாம் காட்டிலும், நீங்கள் மானத்தையும், மரியாதையையும் காப்பாற்றி யிருக்கிறீர்கள். அந்தப்பெருமை இமயத்தைக் காட்டிலும் உயர்ந்தது.

உங்கள் இயக்கம் - த ர த் தை தகுதியை இவற்றை யெல்லாம் விட மேலான ஒழுக் கத்தை வளர்த்திருக்கிறது. அது உங்களுக்கு நிரந்தரமான சொத்துப்போல,

இன்றைய நெருக்கடியான நிலையில் உங் கள் சேவை இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிகமாகத் தேவைப்படுகிறது. முன்பு வேலை பார்த்ததைவிட இப்போது நீங்கள் மேலும் அதிகமாக வேலைபார்க்கவேண்டும். சேவை—தேவை—பாதுகாப்பு ஆகியவற்றுக்குச் செய் கின்ற வேலைகளில் மகிழ்ச்சியடைய வேண்டும.

உங்கள் தேவையை நீங்கள் வாய்விட்டுக் கேட்காமலேயே நிறைவேற்றும் பொறுப்பை இந்த நாட்டு அரசும், இந்தநாட்டு மக்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.